# பூவுலகு

சுற்றுச்சூழல், பேண்தகு அபிவிருத்தி,
பல்துறை சார் இதழ்

நவம்பர் - 2002

கேட்டிருக்கிறீர்களா மரங்கள் பேசுவதை.

மரங்களை நட்டு வளர்த்துப் பாருங்கள்
நாள்தோறும் தண்ணி ஊத்தி வாருங்கள்
நாளொரு பொழுதேனும் நன்கு அவதானியுங்கள்.
மண்ணின் அடியில் அதன் வேரோட்ட இயக்கங்களை
மனசுள் கற்பனை பண்ணுங்கள்
திசைவெளியில் கைநீட்டும் கிளைகளைப் பாருங்கள்
இலைகளின் மேனிகளில்
காற்றின் கை வருடல்களை கவனியுங்கள்.
மரங்கள் உங்களுடன் மனிசரை விட நேசமாய்
பேசுகின்றமை உங்களுக்குக் கேட்கும்.
வேரடி மண்ணின் எரியும் பிரச்சனைகளை
'கிசுகிசு' வென்று பேசும்
காற்று வெளியில் கலந்திருக்கும் முந்தையோரின்
மூச்சுகளில் இருந்து முகர்ந்தெடுத்து
காலாதி காலத்துக் கதைகளைப் பேசும்.
கட்டவிழாத ரகசியங்களை 'சரசர' வென்று
இலைகளில் உரசி மொழி பெயர்த்துரைக்கும்
பேசிப் பேசி மனசின் நோக்காடுகளை எல்லாம்
கரைத்து எங்களின் மனசையே
மௌனவெளி விருட்சங்களாக்கிவிடும்.
மண்ணின் நோக்காடுகளையும் வேர்கள் மூலமறிந்து
திசைகளின் செவிகளில் பேசுபவை மரங்கள் தான்.

கேட்டிருக்கிறீர்களா மரங்கள் பேசுவதை.

விலை ரூபாய் இருபது (20/=)

“முடுண்ட சிந்தனையின் முக்காடுகள் நீக்கி தேடுங்கள் புதுப்பார்வை சித்திக்கும்”



# பூவுலகு

சுற்றுச்சூழல், பேண்தகு அபிவிருத்தி, பல்துறை சார் இதழ்


**இதழ் ~ 01 நவம்பர், 2002**

**வெளியீடு**

பூவுலகின் நண்பர்கள்
திருக்கோணமலை.

**வெளியீட்டாளர்.**

வை. ஜெயமுருகன்.



**தொடர்பு கொள் முகவரி.**

பூவுலகின் நண்பர்கள்
02, நகரசபை விடுதி
காந்தி நகர்
திருக்கோணமலை
இலங்கை.

ஜெயமுருகன் - 8.11.2

**தொலை பேசி**

026 - 23804

0777248235

e-mail.
jeyam2@Sltnet.lk.


## பூவுலகின் நண்பர்களுக்கு..

எல்லாவற்றையுமே புதிதாகத் தொடங்க வேண்டியுள்ளது. போர்க் காலத்தில் எல்லாக் கட்டுமானங்களுமே ஆட்டங்கண்டு போயின. ஆட்டங்கண்டு விட்டனவற்றிலிருந்து தொடங்க முடியாது. புதிய அடித்தளம் போடப்பட்டாக வேண்டும். முதலில் சிந்தனைத் தளத்தில் புதியது நிகழ்ந்தாக வேண்டும். போர்க்காலத்து அநுபவங்கள், பெற்றவைகள். இழந்தவைகள் பற்றிய கணிப்பீடுகள் சரிபிழை பார்க்கப்பட்டு, புதிய விடுதலைக் கோட்பாடு நோக்கி நாம் விரிவெய்த வேண்டியுள்ளது.

எமது எல்லைகளுக்கு உட்பட்டதாக நாம் கருதிய பிரச்சனைகளை எமது எல்லைகள் கடந்த தேசங்களில், தேசங்களின் நடுவில் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே எமது சிந்தனைகளின் எல்லைகளையும் நாம் குறுக்கிக் கொண்டுவிடாமல், துறைசார்ந்த எல்லைகளுக்குள் முடக்கி விடாமல், விரித்து, எல்லைகள் கடந்து புதிய சவால்களுக்கு ஏற்ற வலுவான சிந்தனையை உருவாக்க வேண்டும். இதற்கான ஒரு களமாக, சிந்தனைத் தளத்தில் ஒரு வெளியீட்டை உருவாக்க எண்ணினோம். அதன் விளைவு தான் இந்தப் ‘பூவுலகின்’ வருகை.

‘பூவுலகு’ யாவருக்குமுரியது. சந்திரனில் கால் வைத்ததாக் சொல்லப்படும் விண்வெளிப் பயணிகள் பூமியின் பிறையைக் கண்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அந்தப் பூமிப்பிறை வளர்பிறையா தேய்பிறையா என்பது பற்றியாரும் சொல்லவில்லை ஆனால் இன்றைய சுற்றுச் சூழல் பற்றிய அக்கறையுடையோரின் பார்வையில் இது பூமியின் தேய்பிறைக்காலம். இது தேய்பிறையாகத் தேய்வதற்குக் காரணம் எமது தேய்மதி தான். முழுநிறைவான உலகு பற்றிச் சிந்திக்காமல், அவரவர் கோணத்தின் தேவையை முன்னிறுத்திய, அவசரமான,

சுயநலமான, சீரற்ற சிந்தனையாலும் செயற்பாடுகளாலும் நாம் தான் பூமியைத் தேய்பிறையாக்கிக் கொண்டிருக்கிறோம். இதன் காரணங்கள், விளைவுகள், தீர்வுகள் பற்றி உள்ளூரில் இருந்து உலகம் வரை சரியான பார்வை முன்வைப்புகள் வேண்டும். இதற்கு பூவுலகு நல்ல களமாக நிற்கும்.

பூகோளமயமாதல் பற்றி இன்று பெரிதும் பேசப்படுகிறது. நல்லசிந்தனைகள் பூகோளமயமாதல் பற்றி யாருக்கும் எதிர்ப்பு இருக்கத் தேவையில்லை. ஆனால் பூகோளத்தையே தன்மயமாக்க நினைக்கும் ஆதிக்கப் போக்கினுக்கு அடிபணியவும் தேவையில்லை. அதேவேளை நல்லவற்றை புறந்தள்ளாமல் ஆக்கபூர்வமான, வலுவான சிந்தனைகளை உள்வாங்கி மேற்செல்லுதல் தான் தக்கது. அவை எம்மிடம் இருந்தெழுந்தாலும் பூகோளமயமாகலாம். பலநாட்டு கம்பனிகள், உலக வங்கி, உலக நிதி நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள், புதிய வடிவங்களில் தமது திணிப்புகளை மேற்கொள்ளலாம் தான். அப்போது நாமும் தொழில்சார் முறையில் விணைத்திறனுடன் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை எமது சார்பில் முன்வைத்து நமது குரல்களையும் பலமாய் ஒலிக்க வைக்கவேண்டும். நமது இயற்கை வளங்களை, நிலையான அபிவிருத்தி நோக்கில் பயன்படுத்தி, பாதுகாத்தபடி முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். இதில் நமக்கு நோர்வே, டென்மார்க், சுவீடன் போன்ற பேண்தகைமை அபிவிருத்தி நாடுகளை முன் உதாரணமாக கொள்ளலாம். அவ்வகை முன் உதாரணத்தை நமது பண்பாட்டுச்சூழலுக்கு இசைவாக உள்ளூர் அறிவு செயற்பாடுகளையும் ஒருங்கிணைவாக திட்டமிட்டு உருவாக்க் வேண்டும்.

- சமாதானம் நோக்கிய இரு பக்க முன்னெடுப்புகளும் தீவிரமாகும் இன்றைய நிலையில் நாம் அதனை வரவேற்பதோடு கௌரவமான சமாதான சக வாழ்வுக்கு உதவும் முகமாக நமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் முதல் கட்டம்.

- அபிவிருத்திக்குரிய நிலப்பிரதேசங்களை மக்கள் பாதுகாப்பாக மீளக்குடியேறி அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக, கண்ணிவெடி, மிதிவெடி அபாயங்கிளிலிருந்து நிலமீட்பு செய்தல் மிக முக்கியமான சுற்றுச் சூழல் துப்புரவு பணியாகும்.

- குடா நாட்டிலும் இடம் பெயர்ந்த பிரதேசங்களிலும் நிலத்தடி நீர் உவர்ப்பாக மாறிவருவதும் பெருமளவும் மாசடைந்துள்ளதும் முன்னுரிமை கொடுத்து கவனிக்கவேண்டிய விடயங்களாகும். இதில் அரசு சார்ந்த, அரசு சாரா நிறுவனங்களும் முக்கியமாக நீர்வளச் சபையினரும் ஆய்வு நோக்கில் கவனிப்புச் செய்து தீர்வு காணல் வேண்டும்.

- மீள்குடியேற்ற பிரதேசங்களில் உரியமுகாமைத்துவம் இன்றி மரங்கள் வெட்டப்படுதலும், மண் அகழ்வு செய்யப்படுவதனால் மண்ணரிப்பு ஏற்படும் அபாயங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மரவளர்ப்பு நமது அக்கறைக்குரிய நடவடிக்கையாக அமைய வேண்டும். மூலிகை செடிகள் உற்பத்தி, சிறுசிறு, மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

- மீள் குடியேற்றம் சம்மந்தமாகவும் புதிய கட்டுமானங்கள் அமையுமிடத்தும், புதிய தொழிலகங்கள் அமைக்கப்படுமிடத்தும் சுற்றுச்சுழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து நிலையான அபிவிருத்தி நோக்கில் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- மனநிலை பாதிப்புற்றோருக்கும், நீண்ட கால யுத்தத்தினால் மனச்சோர்வுற்றோருக்கும், முதியோருக்கும், அமைதியும் ஆறுதலும், கிடைப்பதற்கான அமைதி இல்லங்கள், கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் பசுமை வாய்ந்த சூழலில், மதச்சார்பற்ற பண்பாட்டுக்குரியதாக அமைக்கப்படல் வேண்டும். இது மன் அமைதியின்மையை நீக்கி நிதானமான சிந்தனைக்கு நமது மக்களை ஆற்றுப்படுத்த உதவும்.

மேற்குறித்தவை தேசத்தின் மீள் கட்டுமானம் குறித்த எமது சில முன்வைப்புகளாகும். இவை குறித்து மேலும் அக்கறைகளை, விரிவான சிந்தனைகளை நாம் எதிர்பார்க்கிறோம். அவை எந்த இலக்கிய

வடிவமைப்பில் வந்தாலும், தகுதி கண்டு அவை பிரசுரிக்கப்படும். பூவுலகு ஒரு பொதுமையான களம். பூவுலகம் பொதுமையானது. பூவுலகு பசுமையுற காக்கப்படவேண்டும்மென் அக்கறை கொள்வோர் யாவரும் இதன் நண்பர்களே. தமிழகத்தில் 'பூவுலகின் நண்பர்கள்' என்ற பெயரில் ஒரு செயலாக்க சிந்தனை வட்டம் தொழிற்படுகிறது. சுற்றுச்சூழல் பற்றிய நோக்கு விடுதலை சூழலியல் என விரிந்து செல்லும் உலக சிந்தனையோடு இவர்கள் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்கள். ஈழத்திலும் இதுபற்றிய அக்கறை சமகாலத்தில் தோற்றி வருகிறது. சிந்தனாபூர்வமாகவும், செயல்பூர்வமாகவும், இங்கும், நாம், இனமத பேதம் கடந்து, பூவிலகின் நண்பர்களாய் ஒன்றிணைவோம். இத்தகைய சிந்தனை முன்வைப்புகளுக்கு பூவுலகு விரிந்த களமாக என்றும் திறந்திருக்கிறது. இணைக.

**பூவுலகின் நண்பர்கள்.**

## பசுமை ஒன்றியத்தின் செய்தி

திருக்கோணமலை மாவட்டத்தில் இயற்கை வளங்கள் சம்பந்தமாக மக்களுக்கு புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, திருக்கோணமலை பூவுலகின் நண்பர்கள். வெளியிடும், இந்த செய்தித்தாள், மாவட்டத்திலே ஏற்படுகின்ற இயற்கை வளங்களின் சீர்கேடுகளையும், அனர்த்தங்களையும், தடுத்துக் கொள்வதற்காக, மக்களுக்கு ஆரம்ப உணர்வை ஏற்படுத்தும் ஒன்றாக அமைவதோடு, அபிவிருத்தியின் அச்சாணியான இயற்கை வளங்களின், அழிவையும் மாசடைதலையும் தடுத்து, பாதுகாத்து, நவீன முறைகளினால் இயற்கைக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிலையான வளங்களான புவிக்கு உகந்த பாரம்பரிய முறைகளை கையாண்டு, நிலையான அபிவிருத்திக்காக மக்களை விழிப்புணரச்செய்யும் ஒரு சாதனியாக இருக்குமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

**சுரஞ்சன் கொடித்துவக்கு**

**இணைப்பாளர்**

**பசுமை ஒன்றியம்**

## பூமியின் உயிர்

பார்த்தால் தேவதை போல
ஆனால் பசுமை குன்றிய முகம்
வாடிச் சூம்பிய பயிர் போல் உடல்
விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

அழுகுரல் கேட்டவோர் சிறுமி
'அம்மா' என விளித்து
'தாங்கள் யார்? எனக் கேட்டாள்
தயங்கித் தயங்கி 'பூமித்தாய்' என்றாள்
'பூமித்தாய் அழலாமா'?
முகத்தைத் தடவி விட்டபடி
சிறுமி கேட்டாள்.

'அவனவன் பங்குக்கு யுத்தத்தால்
என்னைப் பிய்த்துத் தின்னுகிறான்கள்
அணுகுண்டுகளால் பயமுறுத்துகின்றார்கள்
உயிர் பிழைப்பேனோ தெரியாது'
என்றழுதாள்.

'உங்கள் உயிர் எங்குள்ளது'
கேட்டாள் சிறுமி
'இங்கேதான்! இந்தச் சின்னஞ் சிறு
பூஞ்செடிக்குள் தான்' என்றாள் பூமித்தாய்.
'நானிதை நட்டு வளர்க்கட்டுமா?
நல்லன்போடு கேட்டாள் சிறுமி,
'எங்கே நடுவாய்' பூமித்தாய் கேட்டாள்.
'தாய்க்கும் தாய்மார் உள்ளன்போடு
தண்ணி இறைச்ச பாத்தியில்' என்றாள்.
'நல்லது' என்று செடியைக் கொடுத்தாள்
நல்லுயிர் போலதை
நடுகை செய்தாள் சிறுமி
நாள் தோறும் தண்ணி ஊற்றி வளர்த்தாள்
உயிர்த்த செடியில் ஒரு பூ பூத்ததும்
'பிடுங்கிச் சூடேன் என்னை' என்றது.
'பூமித்தாயின் புன்னகை இதனைப்
பிடுங்கவும்மாட்டேன், யாரும்
பிடுங்கவும் விடமாட்டேன்' என்று
இருகை கூப்பி வணங்கினாள் சிறுமி
பூமாதேவி இதனைக் கண்டாள்
புன்னகையோடு உச்சி மோந்தாள்
உச்சி மோந்த உதடுகளிலிருந்து
பூமியின் உயிர் வாசம் கமழ்ந்து பரவியது.

சு.வி
11-09-2002

# சுற்றுச்சூழல்

**சிலகேள்விகள் சில பதில்கள்** வீ. சுத்தானந்தன்.

**சுற்றுச்சூழல் சமநிலை என்றால் என்ன ?**

இயற்கை என்பதே பூமி தன்னைத் தான் பராமரிக்கும் சமநிலையாக்கத்திற்கு இன்னுமொரு பெயர் தான். மனிதர்களாகிய நமக்குத்தான் ஒரு வாழ்வுச்சுற்றோட்டம் உள்ளது என்றில்லை. விலங்குகள், பூச்சிகள், புழுக்கள், பறவைகள், மரம், செடிகொடிகள், புல் பூண்டுகள், காடுகள் யாவற்றிற்குமே வாழ்வுச் சுற்றோட்டம் உள்ளது. இந்தச் சுற்றோட்டம் ஒன்றில் ஒன்று சார்ந்த இயற்கை என்னும் முழுமையில் இணைந்த ஓட்டம் ஆகின்றது. இந்த இயற்கையின் முழுமைச் சுற்றோட்டத்திற்கான அச்சாணியே சுற்றுச்சூழல் சமநிலை என்பதாகும். இயற்கை பேணும் இந்தச் சுற்றுச்சூழல் சமநிலையை குலைக்கும் ஒரு பகைவன் போல் நாம் குறுக்கிட்டால் இயற்கை எமக்குப் பகையாகிறது. அதை நாம் அனுசரித்தால் இயற்கை நம்மைத் தோழமை கொள்கிறது அல்லது நாம் இயற்கையைத் தோழமை கொள்கிறோம். இயற்கையின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தினின்றும் மனித வாழ்வுச் சுற்றோட்டத்தை மாறுபடுத்தி நோக்காமல் இயற்கையோடு எமது வாழ்வுச் சுற்றோட்டத்தையும் இணைந்ததாக்கி விட்டால் சூழல் விடுதலைச் சூழலாகி விடுகிறது. நல்ல சூழலில் நமது வாழ்வை நடுகை செய்தால் நமது வாழ்வு பேரியற்கை பெருவாழ்வாக மாறியமைகிறது.

**சுற்றுச் சூழல் சமநிலையில் சரிவு என்றால் என்ன ? எப்படி ஏற்படுகிறது ?**

இயற்கை என்பது அல்லது சுற்றுச்சூழல் என்பது ஒரு முழுமையின் பேணுகை. சமநிலையாக்கம் என்பதே சூழலின் தகைமையைப் பேணுவது என்பதுதான். காடுசூழ் வனச்சூழலை நாம் அழித்து விட்டோம் என்று வைத்துக் கொள்வோம். அதனால் வளிமண்டலத்தில், தாவரங்கள் வெளிவிடும் உயிர்வாயு, குறைவு அடைகிறது. மழை முகில்களை ஈர்க்கும் தன்மை காடு இன்மையால் மழை குறைவு அடைகிறது. மண்ணில் இயல்பான உரமாக்கிகளான இலை தழை குழைகளின் சருகுகள் இன்மையால் மண் வளம் குறைவடைகிறது. இதன்படி பார்த்தால் நல்ல காற்றோட்டம், நல்ல நீரோட்டம், நல்ல மண்வளம், அற்றுப்போக அந்தப் பிரதேசத்தின் இயற்கைச் சமநிலையில் சரிவு ஏற்படுகிறது. சரிந்ததன் பின்னால் சீராக்குவோம் என்றில்லாமல் சமச்சீர் நிலையை பேணும் இயல்பான வாழ்க்கை முறையை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

**சுற்றுச்சூழலை பேணுவதை எங்கிருந்து தொடங்குவது ?**

அகத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்.

**அகம் என்றால் மனத்தைச் சொல்கிறீர்களா ? வீட்டைச் சொல்கிறீர்களா ?**

இரண்டையும் தான் சொல்கிறேன்.

நல்ல சிந்தனை நமக்குரித்தாக வேண்டும். நல்ல சிந்தனை நாளா வட்டத்தில் தான் சார்ந்த சிறு சமுகச்சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தினால் கூட்டுச்சிந்தனைச் சூழல் உருவாகும். வீட்டை முதலில் துப்பரவு செய்து விடுவதோடு நமது பணிமுடிவதில்லை. தெருவுக்கும், சுற்றுச் சூழலுக்கும் விரிய வேண்டும். இரசாயன உரம், கிருமிநாசினி இவற்றின் தாக்கமில்லாத வீட்டுத் தோட்டம் போடுவதில் தொடங்கி கூட்டுப் பண்ணை வரைக்கும் இயற்கை முறை விவசாயம் விரியலாம். எனவே முதலில் நல்ல சிந்தனையை நடுகை செய்தல் வேண்டும். நல்ல சிந்தனை நமக்குரித்தானால் நல்ல சூழல் நமக்குரியதாகும். அகச்சூழல், புறச்சூழல் இரண்டும் இணைந்த மாசில்லா இயற்கைச் சூழல் மண்ணில் உருவாகும். ●

# நீரின்றி அமையாது உலகு

**சர்வஞ்ஞன்.**

1

உயிர்வாழ்வதற்கு இன்றியமையாததுதண்ணீர்
உயிரினத்தின் தோற்றுவாயே நீர்நிலைதான்
அதனாலே தான் உயிர்களுக்கு
எல்லா விடாய்களிலும் தண்ணீர் விடாய்தான்
பெரும் விடாயாக இருக்கிறது
பூமிக்கே பெரும் விடாய்
தண்ணீர் விடாய்தான்.

பூமி உருவான காலத்தில்
பாறைக் குழம்பாயிருந்தது.
பெருமழை தொடர்ந்து பொழியப் பொழிய
கெந்தக வெக்கை தணிந்து
இறுகிப் பாறையாகிற்று
பிறகும் பெருவிடாய் தணியாமல்
பிறகும் பெருமழை தொடர்ச்சியாய் பொழிய
ஆவியாவதும். முகிலாகிப் பொழிவதுமாக
பெருநீர் எஞ்சிப் புறம் வழிந்தோடிக் கடலாகியது.

பிறகும் பிறகும் பொழியப் பொழிய
அம்மி பொழிவது போலப்
பாறைக் கனிமத்துகள்கள்
கரைந்து கரைந்து கடல் உப்பாயிற்று.

உப்புநீர் கடல்உணவுகளின் விளைகளமானது.
தண்ணீர் உண்ணீருமாகியது
தாயின் முலைப் பால்போல உணவும் ஆகியது
உணவுப் பொருளாக்கத்திற்கும் ஆதாரமானது
தாயின் கருணை போலத் தண்ணீர் இருந்ததால்
"தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே"
என்பார்கள் தமிழ் மக்கள்.

2

பழித்தல் என்பது வாய்மொழியால் மட்டும் நிகழ்வதல்ல. செயலினால் நிந்திப்பதும் தான். தண்ணீரை சளசளவென்று வீணாக்குவது, விரயம் பண்ணுவது, நீர் நிலைகளை அசுத்தம் பண்ணுவது எல்லாமே பழிப்புதான். நிந்தனைதான். 'பணத்தைத் தண்ணி போலச் செலவளிக்கின்றான்' என்பார்கள். பணத்தை மட்டுமல்ல தண்ணியையும் வீணாய்க் கொட்டுவது நல்லதல்ல என்பதும் இதிலே தொனிப்பொருளாய் மறைந்திருக்கின்றது.

கிராமங்களிலே 'தண்ணீரை அநியாயமாய் விரயம் பண்ணுவோர் ஊதாரியாய் இருப்பர்.' என்ற கருத்து இன்றும் நிலவுகிறது. தண்ணீரின் அருமை தெரிந்து நடந்தால் ஏனையவற்றின் அருமைபெருமையை உணர்ந்து நடப்பது தன்னால் வரும். தண்ணீரினையும் அளவறிந்து பேணுபவர் வாழ்வின் தகைமையையும் பேணுகிறவர் ஆவார்.

தண்ணீரை 'கங்கை' என்று புனிதப்படுத்தி அழைப்பதும் நமது பண்பாடு. புனித விழாக்காலங்களின் போது தண்ணீருக்கு கங்கை என்று தான் பெயர். களத்து மேட்டில் நெல்லிற்குப் பொலி என்று வழங்குவது போலத்தான். கங்கைக்கு மூன்று தளநிலைகள் உள்ளன.

1. ஆகாய கங்கை 2. நிலகங்கை 3.பாதாளகங்கை

இவை முறையே மழைநீர், நதிநீர், நிலத்தடி நீர் ஆகியவற்றைக் குறிப்பதாகும். மூன்று நிலைகளிற்கும் கங்கை என்ற பெயர் இணைப்பு நீரின் புனிதப் படுத்தலுக்கும் உரியதானது கங்கையின் பெயரைச் சொல்லித் தண்ணீரை தெளித்து விட்டாலே தீட்டுகள், துடக்குகள், தோஷங்கள் நிவர்த்தியாகும் என்பார்கள்.

கங்கையைச் சிவபெருமான் சடாமுடியில் வைத்திருப்பதாய் சொல்லப்படுவதை நாம் சுற்றுச்சூழல் பார்வையில் அவதானிப்புச் செய்யலாம். பகீரதன் கங்கையை வேண்டித்தவமிருந்த போது ஆகாய கங்கை பெருமெடுப்பில் பாய்ந்து வந்தது. சிவபெருமான் அதை தலைமுடியில் தாங்கிப் பின் மெலிதாக விடுவிப்புச் செய்தார். இது மலையின் மீது பொழிந்த மழையானது, மண்ணிற்கு, மெதுவாய், ஆறின் வடிவில், பயன்பாட்டுக்குரியதாய், வழிந்தோடி வருவதைச்

சுட்டுவதாய்க் கொள்ளலாம். அத்துடன் தண்ணீரை இறைவனின் முடியில் இருப்பதாய்க் கொள்வதால் அதன் தகுதியும், பெருமையும் அருமையும் உணர்த்தப்படுவதாகவும் கொள்ளலாம். நமது கிராமத்துப் பெண்களெல்லாம் நிலத்தடி நீரைப் பானைகளில் நிரப்பி, தலையில் சுமந்துதானே எடுத்து வருகிறார்கள். அந்தச்சுமையின் கனதி தண்ணீரின் அருமையையும் உணர்த்துகிறது.

நமது முன்னோர்கள் தாமும் தண்ணீரை முறையோடு பேணி அருந்தினார்கள். பிறருக்கும், தாகத்தோடு வரும்போது அருந்தக் கொடுத்தார்கள். தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தார்கள். மிருகங்கள் நீர் பருகத் துரவுகள் தோண்டி விட்டார்கள். தூரெடுத்து துப்பரவு செய்து விட்டார்கள். பறவைகள் நீர் குடிப்பதற்கு உயர்ந்த தூண்களில் நீர் நிரப்பிய பாத்திரங்களை வைத்தார்கள். பொதுக் கிணறுகள் உண்டாக்கினார்கள். இத்தனை தர்மமும் பேணியவர்கள் சாதிகளின் பேரால் தண்ணீர் அள்ள மறுத்த கொடுமைகளும் நிகழ்ந்தன. இயற்கை எல்லோர்க்கும் அளித்த கொடையை, பூச்சியும், புழுவும் புல்லும் பூண்டும் விலங்கும் சுதந்திரமாய் அனுபவித்த ஊற்றுநீரை சாதியின் பெயரால் வழங்க மறுத்தமை எந்தத்தர்மத்தின் பாற்படும்? இதே போன்றவொரு கொடுமையை உலகின் காட்டு வளங்களை அழித்தலினால், நீர் நிலைகளை வற்றடிக்கும் தண்ணீர் மறிப்புத் திட்டங்களால் உலக அரசுகளும் செய்து வருகின்றன. நமது அரசும் தான்.

தண்ணீரும் விலைபோகும் காலம் வரும் என்று யார் கண்டார்? விலைபோகிறது. இனி ஒரு காலம் வரும் காசுள்ளவன் தண்ணி குடிப்பான். தண்ணி கிடைக்காதவன் சண்டை பிடிப்பான். இனிவரும் காலம் தண்ணீருக்காக யுத்தம் புரியும் காலம் ஆகவிருக்கும் என்ற ஆருடங்கள் வெளிப்படுகின்றன. ஒரு பக்கம் தண்ணீரின் பெருக்கால் அழிவும், மறுபக்கம் நீரற்று வரட்சியினால் அழிவும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இயற்கையின் சுற்றுச் சூழலின் சமநிலை குன்றியதனால் இத்தகைய இரட்டை நிலை அழிவுகளுக்கு உலகு முகம் கொடுக்க நேரிடுகிறது. இயற்கை ஏன் சமநிலை குன்றியது? மனித அறிவின் சமநிலை குன்றியமையால், தொழில் நுட்ப வளர்ச்சி என்பதன் பேரால் சூழலைப் பேணாதமையால். சுற்றுச் சூழலின் சமநிலைத் தகைமையைப் பேணாவிட்டால் இயற்கை எம்மை அனுசரிக்காது. ஆதலால் மனிதர்களே! அரசுகளே, தண்ணீர் போன்ற இயற்கை தந்த வளங்களைத் தனிமையுடையாக மாற்றாதீர்கள். நதிநீரை வற்றடிக்காதீர்கள். நாறடிக்காதீர்கள். நிலத்தடி நீரை வீணாக்காதீர்கள். துளி நீரையும் வீணாக்காமல் பேணுபவர் கைகளில்தான் எதிர் கால வளம் இருக்கும். ஏனெனில் துளித்துளியாய் தானே மழை பொழிகிறது. மழைநீரை பேணும் முறைமையை வறள் வலய நாடுகள் பின்பற்றினால்தான் மக்களின் குடி நீருக்கும், பயிர்களுக்கான நீர்ப்பாசனத்திற்கும் வழி பிறக்கும். தனிமனிதனில் இருந்து அரசுகள் வரைக்கும் இதற்கான பங்கும் பொறுப்பும் உள்ளது என்பதை செயல்பாட்டில் காட்ட வேண்டும். காட்டுவார்களா? ●

## தண்ணீர் தண்ணீர்

தண்ணீரே தண்ணீரே
தாகம் தணிக்கும் தண்ணீரே!
நன்னீரே நன்னீரே
நன்றாக உண்ணீரே.

சுத்தமான தண்ணீரே
சுவையான தண்ணீராம்!
சுடவைச்சாறிய நீரென்றால்
நச்சுக் கிருமி இருக்காதாம்

தவிச்ச விடாய்க்கு தண்ணீரை
தராமலிருக்கக் கூடாது
எவர்க்கும் மறுத்தலாகாது
இயற்கை தந்த இன்பமது

இயற்கை தந்த செல்வமது
இழிவு படுத்தக் கூடாது
விரயம் செய்யக் கூடாது
வேண்டும் தண்ணீர் நாளைக்கும்.

**(பூமி எங்கள் வீடு என்ற சிறுவர் பாடல் தொகுப்பிலிருந்து நன்றியுடன்.)**

# சமாதான சூழலும் சகிப்புத்தன்மையும்

க.சுதந்திரநாதன்

இது போருக்கு ஓய்வு கொடுத்திருக்கும் காலம். ஓய்வு என்பது இங்கே செயலற்றிருப்பதை குறிப்பதல்ல. உண்மையில் சொல்லப் போனால் சண்டை பிடிப்பதை விட, சமாதானத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதே மிகவும் இடர்தருவது என்பதை நாம் நிதர்சனமாகக் கண்டு வருகிறோம். சமாதானத்திற்கான செயற்பாடுகளிலேயே மிகவும் உன்னதமானது. சகிப்புத் தன்மையை பேணுவதாகும்.

சகிப்புத்தன்மை ஒரு செயற்பாடு ஆகுமா?

உண்மையில் அதுதான் மிகப் பெரிய செயற்பாடாகும் என்பதே பதிலாக அமையும். பல் சமூக, பல்பண்பாட்டுச் சூழலில் சகிப்புத்தன்மை என்பதை பேணுமிடத்தேதான் சிறந்த சனநாயகப் பண்பு நிலைபெறும். இத்தகைய சகிப்புத்தன்மையை இலங்கையில் ஒருபெரும்பான்மைஇனம் கொண்டிராத மையாலேதான், இன்னுமொரு தேசிய இனம், தனது சகிப்புத் தன்மை வடிவிலான போராட்ட முறையை கைவிட்டு, வன்முறை வடிவினை, கைக்கொள்ளத் தூண்டப்பட்டது. ஆனால் வன்முறைகளின் தொடர் நிகழ்வான போர்ச் சூழலில் இந்த தேசம் எய்திய மொத்த மனித, பொருளாதார, பண்பாட்டு அழிவுகளின் பின்னால் சமாதானத்தின் தேவை உணரப்பட்டுள்ளது. இந்த சமாதானத்தை எய்துவதற்கான போர் ஓய்வும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தான், சகிப்புத்தன்மை என்பது சனநாயகப் பண்பாகவும், மன முதிர்ச்சியுடைய ஓர் பண்பட்ட செயல்முறையாகவும் எமக்கு தேவைப்படுகிறது.

செயன்முறை என்பதை பலரும் ஒரு புறவடிவிலான நிகழ்வாகவே காண்கின்றனர். இது தவறு. காதல்,அன்பு என்பவற்றை ஒரு புறத்தூண்டல் விளைவாக நாம் காண்பதற்கு இடமுண்டு. அங்கே தூண்டலின் உணர்ச்சி அல்லது உணர்ச்சியின் தூண்டலே போதுமானது. ஆனால் சகிப்புத்தன்மை என்பதோ ஒரு மனப் பயிற்சி. தொடர் செயற்பாட்டுத் தன்மையை வேண்டி நிற்பது. வெறுப்பைத் தூண்டுமிடத்தும், வெறுப்போர் மீது அல்லது அதை மோசமாக வெளிப்படுத்துவோர் மீது, அன்பை காட்டாதவிடத்தும்; சகிப்புத்தன்மையை காட்ட கோரி நிற்கும் ஒரு சூழலில் அதைப் பேணித்தானாக வேண்டும். சமாதானத்தின் உண்மையான இலக்கை, சமாதானத்தின் ஊடாக நாம் எய்த எண்ணியிருக்கும் சுயநிர்ணயத்தை, எய்துவதற்கு, முழு உலகையும், சக தேசிய இனங்களையும் எம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு சகிப்புத்தன்மை மிகவும் அவசியமானது. உண்மையாக நோக்கினால் இதுவும் ஒரு வகையான போர் முறை போலத்தான்.

சகிப்புத்தன்மை இங்கே இன்னுமொரு சிறப்பான பங்கையும் ஆற்றுவதற்கு வேண்டப்படுகிறது. அதுதான் போரினால் அழிந்து போன எமது தேசத்தை மீள்கட்டுமானம் செய்வதற்காகும். எம்மையும் எமது தேசத்தையும் மீள்கட்டுமானம் செய்ய உதவுமாறு உலக அரங்கில் குரலெழுப்பப்படுகின்றது. மீள்கட்டுமானம் என்பது பௌதீக வடிவிலான கட்டிட நிர்மாணங்களோடு மட்டும் சம்பந்தமுடையது

அல்ல. சிதைந்துபோன தேசத்தின் ஆன்மாவின் கட்டுமானமும் தான்.

தேசம் என்றால் என்ன? குறித்த நிலப்பரப்பும், அதன் மேலெழுந்த கட்டிடங்கள், தெருக்கள் என்பதை மட்டும் குறித்து நிற்கின்றதா. தேசம்? ''கட்டிடங்களும் சுவர்களும் நகரம் ஆகா'' என்றான் பிளேட்டோ, அதற்கு பதில் 'மக்களும் சேர்ந்தது தான்' என்று இலகுவாகப் பதில் கூறி விடலாம். மக்கள் என்று மொட்டையாக பதில் கூறுவது பொருந்தாது. தன்இறைமை கொண்ட, கல்வியும் பண்பாட்டுடனும் கூடிய, நல்லுறவும் விடுதலையும், கொண்ட ஆன்மாவுடன் கூடிய மக்களும் என்று பதில் விரிந்து கொண்டே செல்லும். அத்துடன் உயிர் வாழ்வன எல்லாவற்றிற்கும் ஊறு விளைவிக்காத விடுதலைச் சூழலியல் பேணுகின்ற என விரிகின்ற பரிமாணங்களையும் கொண்டதாக அது அமையும்.

மேற்கண்ட நோக்கில் நாம் பார்ப்போமாகில், எல்லாமும் அழிந்து போன எமது தேசத்தில், எல்லாவற்றையுமே நாம் மீளத்தொடங்கி வேண்டியிருக்கிறது.சிதைந்து போன கட்டிடங்களை, சிதைந்து போன உட்கட்டுமானங்களை, சிதைந்து போன கிராம, நகர, சமூக, தேசிய இனங்களுக்கிடையிலான உறவு நிலைகளை, சிதைந்து போய் ஊனப்பட்ட மனங்களை, பொருளாதார தரத்தை, பண்பாட்டை, இப்படியே சிதைவுகளின் பரிமாணங்களை பட்டியலிட்டபடியே போகலாம். இவற்றையெல்லாம் மீளக்கட்டுதல் என்பது சிதறிப்போன மந்தைகளை ஒரு பட்டிக்குள் அடைக்கின்ற காரியமுமல்ல. இங்கேதான் மீள் கட்டுமானம் என்பது வார்த்தைகளிலான பந்தலால் அமைப்பதல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எம்மை நாம் தான் சுயகட்டுமானம் செய்ததாகவும் வேண்டும். இந்தக் கட்டுமானத்திற்குள் விடுதலையையும் குடியிருத்தியாகவும் வேண்டும். இதற்கு வேண்டப்படுவது சகிப்புத்தன்மை என்கிற மாபெரும் தூண். இது பலகீனமான தூண் அல்ல. சமபலம் உடைய நிலையில் பலமாய் எழுந்தது.

இரண்டாம் உலகப் போரிற்குப் பின்னால், ஹிட்லரை வெற்றி கொண்ட போதிலும், இங்கிலாந்து பொருளாதாரத்தால் உயிரிழப்புகளால் மிகவும் சீரழிந்தும், வறுமையினதும், நம்பிக்கையின்மையினதும் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடந்தது. வீழ்ந்து கிடக்கும் இங்கிலாந்து தேசத்தை மீள் கட்டுமானம் செய்வது எப்படி எனச்சிந்தித்தான் ஈ. எம். ஃபோஸ்ரர் என்னும் கலைஞன். சிந்தனையாளன். தனது சிந்தனைகளை கட்டுரைகள் வாயிலாகவும், வானொலிப் பேச்சுக்கள் வாயிலாகவும் மக்கள் முன்வைத்தான். அவ்வாறு 1951 ம் ஆண்டில் அவன் பி.பி. சியில் நிகழ்த்திய சகிப்புத் தன்மை என்ற தலைப்பிலான உரையின் சாராம்சத்தை இங்கு தருவது பொருந்தும்.

"மீள்கட்டுமானம் என்பதன் அடிப்படைப் பிரச்சனையே மனோவியல் சார்ந்ததாகும். மீள்கட்டுமானத்திற்கான எந்தத்திட்டமும் செயற்படுத்தப் படுவதற்கு முன்பாக அதற்குகந்த ஒரு சிறந்த உயிர்ப்பு நிலை அல்லது காத்திரம் வாய்ந்த மனோபக்குவம் அவசியமாகும். காத்திரமான மனநிலை என்பது எது? இங்கு தான் கருத்துகள் வேறுபடுகின்றன. என்ன வகையான ஆன்மார்த்த பக்குவம் நாகரிகத்தின் மீள் கட்டுமானத்திற்குத் தேவைப் படுகிறது எனும் கேள்விக்கு அனேகமானோரின் பதில் "அன்பு" என்பதாகவே அமைகிறது. அன்பு என்பது தனிப்பட்ட குடும்ப அல்லது தெரிந்தவரிடையிலான நட்பு என்று அமைகின்ற போது சக்தி மிகுந்த ஒன்றாக உள்ளது. ஆனால் பொது அலுவல்களின் போது அது பலனளிக்கத் தவறிவிடுகிறது தேசங்களையும் இனங்களையும், அன்பு செய்யுங்கள் என்ற எதிர்பார்க்கை நிறைவேறுவதில்லை. வரலாற்றின் நடுக் கூறுகளில் மீளவும் மீளவும் கிறீஸ்தவ நாகரிகம் அன்பை வலியுறுத்திய போதும், மதம்சாராத பிரெஞ்சுப் புரட்சியும் அதை ஓரளவு அழுத்த முயன்ற போதிலும் 'அன்பு' ஏமாற்றி விட்டது. 'அன்பு' என்கின்ற நற்பண்பு எவ்வளவு தான் அழுத்திச் சொல்லப் பட்டிருந்த போதிலும் (2ம் உலகப் போரின் பின்னர் மனித வாழ்வின் இருப்பும், சாராம்சமும் பொருளற்றுப் போய்

விட்ட சூழலில்) அதன் அடிப்படையில் பிறரை அல்லது பிற இனங்களை அன்பு செய்யுமாறு சொல்வதில் அர்த்தமில்லை. எனவே அன்பு கெட்டுப்போய் வெறுப்பு வளர்ந்த மனங்களை, அன்பு செய் என்று உபதேசிக்க முடியாது. ஆனால் சகிப்புத் தன்மையோடிருங்கள் என்றே சொல்லலாம். சகித்துக் கொள்ளுங்கள். பல்லின சமூகங்களை அவற்றின் இருப்பை சகித்துக் கொள்ளுதல். சகிப்புத் தன்மையானது அன்பைப் போல் உணர்ச்சிதரும் இனியதாக அல்லாமல், ஜடத்தன்மை கொண்டதாயினும் நாகரீகத்தின் மீள்கட்டுமானத்திற்கு அது அவசியமாகும் என இங்கிலாந்து மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன்."

மேற்குறித்த உரையானது போருக்குப் பிந்திய, சமாதானத்திற்கான சூழலில், இனங்களுக்கிடையில் நல்லுறவின்மை சீர்செய்யப்படாத சூழலில், அதுமேலும் சிதைக்கப் பட்டு, சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கான திசைதிருப்பல்கள் இடம் பெறும் சூழலில் உள்ள இந்த தேசத்திற்கும் பொருந்தும். இழந்து போன எல்லாவற்றையும் மீள்கட்டுமானம் செய்வதற்கு முன்பாக தேசிய இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை மையமாக்கிய, நாகரிக மீள்கட்டுமானம் பற்றி நாம் உரக்கச் சிந்திக்க வேண்டும். சந்தியில் நின்று சண்டைபிடித்தவன், சந்திசிரிக்கமுன்னம், உரிந்துபோன தனது ஆடையைச் சரிசெய்து மானம் காப்பதுபோல, நாம் எம்மைச் சரிசெய்து கொள்ள வேண்டும். போரின் வடிவ மாற்றம் என்பதை பொது மக்கள், பொறுப்பற்ற தன்மையின் செயல்பாடாக விளங்கிக் கொள்ளாமல், சகிப்புத்தன்மையோடு கூடிய நாகரீக கட்டுமானத்தின் நல்லவடிவமாகவும் மாற்றியமைக்க வேண்டும். எந்தப் போர் வடிவத்தின் பின்னாலும் அறிவும், பொறுப்புணர்வும், வேண்டப்படுவது போலவே சமாதானகால கட்டத்தின் ஊடாக எய்தும் சகிப்புத்தன்மையும் எம்மை, எமதிலக்கை நோக்கி, முன்னேஇட்டுச் செல்லும் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

# விடுதலை இயற்கை

மருந்திடுக
நோய்களுக்கு நல்லியற்கை மருந்திடுக

மாசில்லாத உணவு நன் மருந்து
மாசில்லாத நீர் மருந்து
மாசில்லாச்சுற்றுச்சூழல் மாமருந்தியற்கை
மாசில்லாச்சூழல் அளைந்து வரும் காற்று
நல்ல மருந்தோட்டம்.

நல் உணவு, நன்னீர், நல்லசூழல்,
நல்ல காற்று இருந்திடில்
மருந்தேன் மாயமேன்?
இருந்தரசாளும் நல்லியற்கையை துறந்து
ஏதேதோ இடர் தருகின்ற தேவைகளின்
கைதியாய் மாறிய மனிதன்
தானே தனக்கு நோயாகிப்போனான்
தனது நோயை எங்கும் திணிக்கிறான்.

இயற்கையின் மடியில் மருந்திருக்க
தேடிப்போன தெய்வீக மூலி
காலடியில் இருக்க
மாடி மனையெல்லாம் ஏறி இறங்குகிறான்
மேலும் இளைத்துப்போய்
இழுத்துப் பறித்தபடி மூச்சிரைக்க
இயற்கையின் மடியை இழந்தவனாய்
நோயின் படுக்கையில் வீழ்கிறான்.

தஞ்சமடைந்தாரைக் கைவிடாத
நல்லியற்கைச் சூழலை நாம்
பேணியிருந்தால்
இந்த ஈனம் எமக்கு நேர்ந்திருக்குமா?
இனியும் நோய்க் கூறுற்ற சமுதாயத்தை
உற்பத்தி செய்யும்
சிந்தனைகளின் வசப்படாமல்
எம்மை விடுதலை செய்வோம்
நோயுற்றிருக்கும் இயற்கையை விடுவிப்போம்
விடுதலை இயற்கை எம்மை விடுவிக்கும்
நன்மருந்தாகும் ; நாமெல்லாம்
விடுதலை இயற்கை மருத்துவராவோம்.

சு. வில்வரெத்தினம்.
25-11-2002

# "ஐயோ என்னைக் கழுவுங்கள்"

**த. சுகந்தன்**

"ஐயோ என்னைக் கழுவுங்கள்" என்று தூசி படிந்த பஸ்ஸின் பின் புறத்தில் விரல்கொண்டு ஒருவன் எழுதியிருந்தான். இந்த வாசகத்தை இலங்கைப் போக்குவரத்துச் சபையில', எவரும் கவனிக்காமலேயே பலநாட்கள் அந்த பஸ் ஓடித்திரிந்தது. இன்றைக்கும் தூசி படிந்த பஸ்களைக் காணும் போதெல்லாம் எனக்கு அந்த நாள் ஞாபகம் நினைவில் எழும் "ஐயோ என்னைக் கழுவுங்கள்."

இன்றோ மாசு படிந்து விட்ட சுற்றுச் சூழல் முழுவதுமே இப்படித்தான் குரலெழுப்புகிறது. "ஐயோ என்னைக் கழுவுங்கள்". ஆனால் அந்தக்குரல் மனிதர்களுக்குக் கேட்பதில்லை. கடற்கரைக்குப் போகிறார்கள். குப்பைகள் இல்லாத இடம் பார்த்து அமர்ந்திருந்து உண்கிறார்கள். கொறிக்கிறார்கள். பின்னர் தாங்கள் இருந்த இடத்தில் 'குப்பை கொட்டி' விட்டு எழுந்து செல்கிறார்கள். குப்பை கொட்டும் பெட்டி அண்மையில் தானிருக்கும். காலாறநடந்து வந்தவர்கள், சின்ன நடை நடந்து, அவற்றை சேகரித்து, அதனுள் இடமாட்டார்கள். மனிதர்கள் ஏன் இப்படி 'சோம்பேறிகள் ஆகிவிட்டார்கள்? குப்பை கொட்டுபவர்கள் ஆகிவிட்டார்கள்?

ஒரு கடற்கரைக்கு போய் வாருங்கள், கரையோரமாய் அடர்ந்திருக்கும் பற்றைகளில், சோடனைக் கடதாசிகளால் அலங்கரித்தது போல, பொலித்தின் பைகள் கொழுவுண்டிருக்கும். இன்றைய உலகின் மிக மோசமான சுற்றுச் சூழல் மாசாக பொலித்தீனே விளங்குகிறது. முன்பெல்லாம் கடைத்தெருவிற்கு, சந்தைக்கு போகிறவர்கள் கூடையோ, பையோ, கொண்டு செல்வார்கள். இன்றைய நாகரீக மனிதரோ கடைத் தெருவிற்கு கையை வீசிக்கொண்டு போவார்கள். வரும் போது பொலித்தீன் பையை வீசிக்கொண்டு வருவார்கள். பொலித்தீன்களினால் மாசு விளையும் என்பது பற்றிய அறிவே இன்றைய மனிதரில் பெரும்பாலானவர்க்கு இருப்பதில்லை. இதனால் இன்றைய உலகு பொலித்தீன்களின் குப்பைக்காடு ஆகிவிட்டது. அதைக் கூட்டி எரித்தாலும் அதனால்'எழும் புகை மண்டலமோ காற்று மண்டலத்தை அசுத்த வாயுவால் நிரப்பிவிடும். இயற்கை கண்காணுமிடமெல்லாம் குரலெழுப்புகிறது "ஐயோ என்னை துப்பரவு செய்யுங்கள்." ஆனால் நாமோ பாரா முகப் பிராணிகள் ஆகிவிட்டோம். இயற்கையோடு ஒட்டுறவே அற்ற சமுதாயப் பிராணிகள். ஆனால் பிராணிகளின் வாழ்வையும் அழிக்கும் பிராணிகளாகவும் நாம் மாறிவிட்டது தான் கொடுமை.

ஐ. தே. முன்னணியினர் தமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது பொலித்தின்களினாலான சோடனைகளைத் தவிர்த்தார்கள். இது ஒரு முன் உதாரணம் தான். ஏனைய கட்சிகளும் இவற்றைப் பின்பற்றியிருந்தால் நல்லது. இது ஒரு புறமிருக்க ஆட்சிக்கு வந்த பின்னர் ஐ. தே. மு. வினர் ஏன் சூழலுக்கு மோசமான கேடாக விளங்கும் பொலித்தீனை தடைசெய்யவில்லை? வர்த்தகச் சூழலுக்கு அஞ்சிப் போலும். பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளே பொலித்தீனிற்கு தடைவிதித்திருக்க, இலங்கை மட்டும் பொலித்தினை பாவித்து வருகிறது. ஒரு பிரசார உத்தியாக மட்டும் அதன்பாவனை தவிர்க்கப்பட்டதே தவிர அதனால் நிரந்தரமாக சூழல் மாசடைதல் குறித்து அக்கறையோடு, ஆட்சிக்கு வந்த பின் செயற்படவில்லை. ஒரு வேளை 'பொலித்தீன்' என்பது ஆடு, மாடுகளிற்கு ஒருவகைத் தீன் என்று கருதுகிறார்களோ? தீன் அல்ல. அது நஞ்சு. உணவுப் பொருள்களை அதில் சுற்றுவது கூட ஆபத்தானது என்ற உண்மைகள் அறிவியல் உலகினால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் நாம் தொடர்ச்சியான கொலைகாரர்களாகவே இருந்து வருகிறோம்.

என்ன விழிகள் விரிகின்றனவா? நாம் கொல்கிறோமா என விழிக்கின்றீர்களா? ஓம். நாம் சுதந்திரமாயத் திரியும் விலங்கினங்களையும் சுகாதாரமின்மையால், சுற்றுச் சூழல் பற்றிய கவனமின்மையால் கொல்லவே செய்கின்றோம். அண்மையில் நாம் ஒரு செய்தியை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். மிருககாட்சிச் சாலைக்குள் மனிதர்கள் போட்ட பொலித்தீன் பைகளைத்தின்ற மான்கள் செத்து மடிந்தன. இதனால் அரசு அதனுள்ளே பொலித்தீன்களை எடுத்துச் செல்லுவதனைத் தடைசெய்துள்ளது. மிகநல்லது. ஆனால் மிருகக்காட்சிச் சாலைக்குள் வெளியே உலாவும் விலங்குகள் எல்லாம் பொலித்தீன்களை தின்று சாகலாமா? ஆனால் இப்படித்தான் பல விலங்குகள், மனிதனே வளர்க்கும் ஆடு மாடுகள் தின்று சாகின்றன. உள்ளே போன பொலித்தீன்கள் எல்லாம் திரண்டு பந்தாகி அவற்றிற்குச் சாவைக் கொண்டு வருகின்றன. இப்பொழுதுசொல்லுங்கள் நாம் விலங்கினங்களைக் கொல்லுவது இல்லையா ?

ஏன், நாம் உயிர் வாழும் குறுகிய ஆயுட்கால வாழ்விற்காக, மனித உயிரினங்களின் விடுதலை வாழ்விற்கு தொடர்ந்து உயிருட்டியாய் இருக்கும், சுற்றுச் சூழலையும், மௌனமாய்க் கொலை செய்துதான் வருகிறோம். மௌனமாய்ச் செய்தால் அது கொலை இல்லையா?

மௌனமாய் மட்டும் தான் கொலை செய்கிறோமா? கூவியழைத்தும் கொலைகள் நடக்கின்றன. ஒலிச்சூழல் மாசடைதல் பற்றிச் சொல்லுகிறேன். அமைதியை வாலாயப் படுத்தவேண்டிய ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் அலறுகின்றன. மந்திரங்களுக்கே மௌனமாய் உச்சரிப்பதில்தான் வலு அதிகம் என்கின்றன ஆன்மீக அறிவு நூல்கள். ஆனால் ஆன்மாவை லயப்படுத்த வேண்டிய ஆலயங்களிலோ பிராமணர்கள் மந்திரங்களை ஒலிபெருக்கி பூட்டி உரக்க கூவுகிறார்கள். இந்து ஆலயங்களில் தான் இப்படியென்றால் இப்போது கிறிஸ்தவ, பௌத்த தேவாலயங்களும் ஒன்றோடொன்று போட்டியிட தொடங்கி விட்டன. இதைவிடப் புதிதுபுதிதாய் முளைக்கின்ற சபைகள் வேறு கும்பல்களைச் சேர்த்து குழறிக் குரலெழுப்புகின்றன. இப்படி இவர்கள் சேர்ந்தெழுப்பும் ஒப்பாரிகள் எல்லாம் மனிதகுலம் எதையோ இழந்து விட்டதை உணர்த்து கின்றன. எதை? உள்ளமைதியைத்தான். இழந்து போன உள்ளமைதியை ஒப்பாரி வைத்துப் பெறலாமோ? ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், கல்விச்சாலைகள் முன்பாக எல்லாம் வாகனங்கள் 'ஹோர்ன்' ஒலிப்பதாகாது எனத் தடைகள் உள்ளன. பதிலாக அங்கேயே ஒலிச் சூழலை மாசுபடுத்தினால்? அடக்கம் என்பது அவையடக்கம், தன்னடக்கம், மட்டுமல்ல ஒலியடக்கம், ஓசையடக்கமும் தான். ''மாசில் வீணை'' என்று அப்பர் பாடியது ஒலிச்சூழலை மாசுபடுத்தாத இனிய ஓசையின் இசையமைதியைத்தான் குறிக்கிறது.

ஆலயங்கள், கல்விச்சாலைகள், ஆஸ்பத்திரிகள் இவற்றின் முன்பாக மட்டுமல்ல நகர்ப்புறங்களெங்கும் அநாவசியமாக வாகனங்களின் உறுமல்களே ஓசை நிரப்பிகளாக உலாவுகின்றன. இதிலே அவை எழுப்பும் 'ஹோர்ன்' ஒலிகளும் கூட்டுச் சேர்ந்தால் கேட்க வேண்டியதில்லை. செவிப்பறை தகர்ந்தே விடும். ஒரு மனிதனுக்குப் பைத்தியம் பிடிக்க வேண்டும் என்றால் ஓசைகளால் இவ்வுலகை நிரப்பி விட்டால் போதும். ஓசையில்லாத உலகம் என்றுதான் உருவாகுமோ? ஓய்ந்திருக்கும் வேளைகளில், ஏகாந்தமாயிருக்கும் நேரங்களில், அமைதிதவழும் ஆனந்த மயமான சந்தியா வேளைகளில், உற்றுக் கேளுங்கள். இந்த அண்டவெளியானது எழுப்புகின்ற ஓங்காரஓசை, பாடாத பாட்டு எமக்கு கேட்கும். இயற்கையின் இந்த உள் மௌன அழைப்பு, ஓசை எழுப்பிகளால் ஊறுபடுத்தப்படுகிறது. ஓ மனிதா! உன்னை இயற்கை அழைக்கிறது. இரைச்சலை அடக்கு. ஓ மனிதா உன்னைத் தன் இயல்போடு தழுவிக் கொள்ளுமாறு இயற்கை கூவுகிறது, தழுவிக்கொள். ஓ மனிதா ஓயாமல் நீ மாசு படுத்தும் இயற்கை மௌனமாய் அழுகிறது. மாசடைந்த சூழலை கழுவிவிடு. உன்னையும் தான் மாசற்றவனாய் கழுவியெடு. ●

# நன்செய் நாகரிகம்

இது எங்கள் உலகு
இது எங்களுடைய பூவுலகு
எல்லா உயிரினங்களினதும் பாரம்பரியப்
பூந்தொட்டிலாகிய பூவுலகு
உயிரினங்களின் கண்மலர்விற்கு முன்பாக
தன்மலர்ந்தவள் இந்தப் பூவுலகாள்
பூப்படைந்த இவளின் பக்குவம் தான்
எல்லா உயிர்களையும் ஈன்றெடுத்த கர்ப்பப்பை
ஆதலால் மிகுந்த காதலோடு
இந்தப் பூகர்ப்பத்தைக் காக்க வேண்டியது
எங்கள் கடன்
அறிவறிந்த மானுடர் நம்மனைவரதும் கடன்.

பூவுலகு என்றால்
பெண்மையை ஒத்த மென்மையுடையது
என்றும் பொருள் கொள்ளலாமா?
கொள்ளலாம்.
உள்ளிதயம் மெல்லெனப் பூத்தவள்
இந்தப் பூவுலகாள்.
இதனாலேதான் இவள் பூமகளென்றும்,
பூமா தேவியென்றும்,
பூமித்தாயென்றும் அழைக்கப்படுகிறாள்.
பூமகள் என்றழைக்கும் போது இவள் கன்னி
பூப்பெய்திய கன்னி.
பூமா தேவி என்றழைக்கும் போது
நித்யகல்யாணி.
பூமித்தாயென்று அழைக்கும் போதோ
எண்ணற்ற உயிர்களை ஈன்று புரக்கும்
அன்பின் இயல்பினளாகிய அம்மை.
இம் மூவியல்பினளாகவும் இருப்பதனால்தான்
வள்ளுவன் இவளை
நிலமென்னும் நல்லாள் என்றழைத்தான்.
இந்நல்லாள் தன் இயல்பில் பிறழாதவாறு
காக்க வேண்டியது எங்கள் கடன்
மானுடராகிய நம் அனைவரதும் கடன்.

நிலமென்னும் நல்லாளின்
மிகப்பெரிய நல்லியல்பு பொறுமை
மானுடராகிய எங்களின் நாளாந்த
செயல்பாடுகளோ
இவளின் பொறுமையைச் சோதிப்பனவாக
உள்ளன
எங்களின் பொல்லாமைகள் இவளைப்
பெரிதும் கோபமூட்டிக் கொண்டிருக்கின்றன.
கொதிநிலையின் உச்சத்திற்கே கொண்டு
போகுமளவிற்கு
இவளுக்கு நாம் விளைவிக்கும்
கொடுமைகள் ஏராளம்
பூவுலகின் மெல்லியல்பை புரிந்துணராப்
பாவிகள் நாம்
இவளின் பசுந் தோகைக் காடுகளின்
மெய்யழகைச்சிதைத்துக் கொண்டிருக்கும் நாம்
நிலமென்னும் மெய்யழகாளின்
நேசக்காதலர்களா சொல்லுங்கள்

அக்கினிக்குழம்பையே அடியில் போக்கிவிட்டு
பக்குவம் கனிந்தவளாய் பண்பட்டு நின்றவளை,
உயிர் வாழ்விற்கு உகந்தவளாய்ச்
சமைந்தவளை உரக்கக் கோபமூட்டி
உன்மத்தாளாக்கப் போகிறோமா ?
இவள் தன் இதயத்தின்
சமநிலை குழம்பினால் என்னாகும்?
பூவுலகின் மென்மையை வல்லாண்மையினால்
பிணிக்காமல், பாழ் செய்யாமல்
இவளை அழகுறக் கையாளல் ஆகாதா ?

கையாளல் என்பதுவும் பிழை,
பெண்ணை உடைமையாகவும், போகப்
பொருளாகவும்
கருதுகிற ஆணாதிக்க மனோபாவம் போல
பூமியையும் உடைமையெனக் கருதும்
ஆதிக்க குணாம்சத்தின் வெளிப்பாடு அது.
நாம் வருகிறோம்: போகிறோம்
பூமியோ தன் சுற்றுகை வட்டத்திற்குள்
வருகை தரும் உயிர்களுக்கெல்லாம்
வாழ்வருளும் நிரந்தரி
நாகரிகங்கள் பல வந்தன: போயின

பேரரசுகள் பலவும் தமது
ஆதிக்கக் கருத்தியல்களின் நடுகைக் களமாக
பூமிப் பரப்பை பாழடித்தன:
அரண்மனைக்காக, பெரு நகரமைப்பிற்காக
காடுகளைப் பலியிட்டன.
வாழ்வியலின் நன் செய் நிலமாகப் பேணாமல்
ஆதிக்க வேட்டைக் காடாக்கின.
நாசகாரங்கள் நாகரீகங்கள் எனப்பட்டன
இன்றைய உலகின்
நாசகாரப் பொறிமுறைச் செயற்பாடுகளின்
கட்டற்ற வீக்கமும், கட்டிடக் காடுகளைத்தான்
உற்பத்தி செய்கின்றன நாகரிகத்தையல்ல.

நாசகாரங்களிற்குப் பெயர் நாகரிகம் ஆகுமா?

நாகரிகம் என்பது ஒன்றே ஒன்றுதான் இங்குண்டு.
பூமியின் காப்ப வீட்டை
பேணிக் காப்பது ஒன்றோதான் அது.
நாசகாரச் செயற்பாடுகளிலிருந்தும்
சேதமில்லாமல் காப்பது
பேசாமடந்தைகளாக்கிப் பெண்ணின் வாழ்வை
அடிமைப்படுத்தியதற்கெதிராக
பெண்ணுரிமைக் குரல்கள் எழுந்தது போல
பேசாமடந்தையெனத் துயருறும்
பூமிப்பெண்ணாளிற்காகவும்
ஆயிரமாயிரம் குரல்கள் எழுப்பிக் காப்பது
நமது கடன்
மானுடர் நம்மனைவரதும் மாபெருங்கடன்.

ஐந்தையும் ஒடுக்கும் ஆமை தன் முதுகில்
உலகைச்சுமந்திருப்பதாய்
ஒரு தொல்கதை உண்டு.
பொறிகளை ஒடுக்கிடும் ஆமை போலவே
ஐம்பூதங்களின் சேர்க்கையாய்
அழகுற அமைந்த பூவுலகு
அதல பாதாளத்திற்குள் புதைந்து விடாமல்
நன்செய் பூமியாய் இதனைக் காத்தளிப்பது
நயத்தக்க நாகரீகம் என்பதை அறிவோமாக
நாகரிகம் என்பதே நன் செய்நிலத்தை
நாளைய தலைமுறைக்கு கையளித்தல் தானே

சு. வில்வரெத்தினம்

22-11.2002

# பூமியை சுமக்கும் சிறுவன்

பொதி சுமந்து சென்றுகொண்டிருந்தான்
ஒரு சிறுவன்,

'பொதிக்குள் என்னடா தம்பி'

விடுப்புக் கேட்டேன் நான்

'பூவுலகு' என்றான் பதறாமல்
'புலுடா விடாமல் சொல்' என்றேன்.

'புளுகு இல்லை உண்மைதான்,

மாசுகள் மண்டிய பூமியை
மனிதர் எல்லோரும் கைவிட்டேகினார்
மாசுகள் நீக்கிய பூவுலகாக்கி
சுமந்து வருகிறேன்'
என்றான் சிறுவன் விளக்கமாக.

'பூமி பாரம் கனக்கவில்லையோ'
போக்குக்காக கேட்டேன் நான்.

'மாசில்லாத மனம் போல
மாசுகளில்லாப் பூவுலகும்
பூவைப் போலத்தான்' எனச் சொல்லி
போய்க் கொண்டிருக்கிறான் சிறுவன்
புவியின் சுற்றுப் பாதை வழி
இருகை வீசி சமநிலை தளம்பாமல்.

10-09-2002

# தமிழும் தாவரமும்

-ல. சண்முகசுந்தரம்.

### தாவரத்தின் தனிப்பண்புகள்

உலகில் மனிதன் தோன்றி முப்பது இலட்சம் ஆண்டுகள் கூட இருக்காது. ஆனால் தாவர இனம் தோன்றி ஒன்பது கோடி ஆண்டுகள் ஆகி இருக்கலாம் எனக் கருதுகின்றனர். தாவர இனத்திலுள்ள கணக்கற்ற வகைகள் எந்த இனத்திலும் இல்லை. தாவரங்கள் தான் உயிர் இனங்களின் ஆதித் தோற்றம், தாவரங்கள் மட்டும் மண்ணோடு மண்ணாய்க் கரைந்திருக்கிற கந்தகம், அமிலம் முதலிய தாதுக்களையும், வானில் மருவிக் கிடக்கும் கரி என்னும் தாதுவையும் நேரடியாக இழுத்து வைத்துக் கொண்டு சூரிய ஒளிச்சேர்க்கையின் வேகத்தால் புதிய கண்ணறைகளைத் தாமே உண்டாக்கிக் கொள்கின்றன.

தாவரங்கள் இல்லையானால் எண்ணற்ற விலங்குகளும் பூச்சிகளும் உயிர் வாழ இயலாது. மனிதர்களின் உணவுப் பொருளாகவும், பலவகை மருந்துப் பொருளாகவும் தாவரச் செல்வங்கள் பயன்படுகின்றன. எண்ணற்ற இசைக்கருவிகள், தாள்கள், வண்டிகள், கலப்பைகள் ஆகியன செய்வதற்குப் பயன்படும் இறப்பர், மரத்திலிருந்து கிடைக்கிறது. மக்கிப் போன மரம், செடி கொடிகள் நிலக்கரி வயல்களாய் விளைகின்றன. மின்சார உற்பத்திக்கு நிலக்கரி பயன்படுகிறது. பலவகை மருந்துகள், இரசாயனக் கலவைகள், மணப்பொருட்கள் தயாரிக்க, நிலக்கரி பயன் படுகிறது. மேலும் வைரக்கற்கள் நிலக்கரியிலிருந்தே விளைந்து வெளிப்படுகின்றன.

மேகத்தை மழையாகப் பொழிய வைக்கும் ஆற்றல் தாவரத்துக்கு உண்டு. பிராணிகள் வெளிப்படுத்தும் கரியமிலக்காற்று வெளியில் தங்கிக் காற்று மண்டலத்தை நச்சு மண்டலமாக மாற்றாமல், தாவரங்கள் காரியமிலக் காற்றினைத் தன் பக்கம் இழுத்துக் கொள்கின்றது. அதில் உள்ள கரிப்பொருளை எடுத்துக்கொண்டு, உயிர்காற்றை வெளியில் விடுகிறது தாவரம் இவ்வரிய செயலால்தான் உலகில் மக்களும் ஏனைய பிராணிகளும் தலைமுறை தலைமுறையாக நிலை பெற்று வாழ முடிகிறது.

### தாவரத்தின் பயன்

தமிழ்மக்கள் தாவரத்தினிடம் வைத்துள்ள பக்தி மிக உயர்ந்தது. அறும்புகல், துளசி ஆகியவற்றை வணங்கி வழிபடுவர், பலாமரம், புன்னைமரம். மருதமரம், வில்வமரம் ஆகியன தலவிருட்சங்களாக இருக்கின்றன. கடவுளர்கள் மலர்களில் வீற்றிருப்பதாக நம்மவர்கள் கருதுவர். பெண்களை வல்லி, பூங்கொடி, கொம்பு எனச் சொல்வது தமிழ் வழக்கு.

கடம்பூர், பூந்த மல்லி, திருவல்லிக்கேணி போன்ற பல ஊர்களின் பெயர்களில் தாவரம் இடம் பெறுகிறது. பரத கண்டத்தையே தாவரப் பெயரில் முன்னோர்கள் வழங்கிவந்தனர். நாவலந்தீவு என்பது பரதநாட்டின் பழம் பெயர். உலகத்தைக் குறிக்கும் சித்தர் ஒருவர் பிரபஞ்சத்தை நந்தவனம் எனக் குறிப்பிடுகிறார். தமிழ்மக்கள் தங்களுடைய பழக்க வழக்கம் பண்பாடு சமயம் எல்லாத் துறைகளிலும் தாவரப் பெயர்களையே பெயர்களாக வைத்து வழங்கியுள்ளனர். இறைவனுடைய அருளை

நிழல் என்றும் தண்ணிழல் என்றும் குறிப்பிடுவர்.

பூவின் சிறப்பை அதன் மணம் காட்டுவது போல மனிதர்களிடமுள்ள சிறப்பை எடுத்துக் காட்டுகிறது கல்யாணம் ( திருமணம்). பெண் பருவமெய்தினால் பூப்பெய்தினாள் என்பர். தாவர இனம் ஒவ்வொன்றிற்கும் சூல் உண்டாகிக் குலவிருத்தியாவது பூவில்தான். அரைகுறையான வளர்ச்சி பெற்றுக் குழந்தை இறந்து விடுவதைக் காய்விழுந்து விட்டது என்பர். பெருகிவளரும் சுற்றத்தைக் 'கிளை' என்பர். தளிரும் பூவும் 'கொம்பில்' உண்டாவதால் பெண்ணைக் கொம்பு என்பர். நிலத்தைப் பக்குவப்படுத்திக் கொழு புரிகிற தொண்டை மனைவியைப் பக்குவப்படுத்திக் கணவன் புரிகிறான். எனவே கணவனைக் கொழுநன் எனக் குறிப்பர்.

காய், பழம், பருப்பு, சக்கை முதலிய தாவரப்பொருள்கள் அரிய உணர்ச்சிக் கூறுகளைக் காட்டும் அடையாளச் சொற்களாக வந்து தமிழில் மருவி விட்டன. தாவரத்தின் குலப்பெருக்கம் பூவில் அமைந்து கிடக்கிறது. மனித இனத்தின் குலப்பெருக்கம் பெண்களிடம் அமைந்து கிடப்பதால் பெண்களைப் பூவையர் என்றனர். தாவரத்தைத் தமிழ் மக்கள் மதித்தாற் போல உலகில் வேறு எந்த இனத்தாரும் மதிக்கவில்லை எனலாம்.

தமிழ்நாட்டில் நால்வகைப் பிரதேசம் மலைப்பகுதி, மேட்டுநிலம், வயல்வெளி, கடல்பகுதி எனப் பிரிந்து கிடக்கின்றன. வறண்ட நிலப்பகுதியையும் சேர்த்து ஐந்து எனக் கணக்கிட்டனர் முன்னோர்கள். இந்நிலப் பகுதி ஒவ்வொன்றிற்கும் மலரின் பெயரினையே வைத்தனர். நம் தமிழ் மக்கள். இல்லற வாழ்க்கையிலும் ஐந்து விதமான நிலைகள் காணப்படுகின்றன.

அலர் என்பது மலரை உணர்த்தும் சொல். இளைஞர்களின் உறவு மற்றவர்களுக்குத் தெரிந்து அவர்களுடைய பேச்சுக்குப் பொருளாகி விட்டால் அதற்கு 'அலர்' என்று பெயர். குறிஞ்சி மரம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் பூக்கும். காதல் உறவிலும் பெண்ணின் வயது பன்னிரண்டு என்று வகுத்து வைத்துக் கொண்டது ஓர் அழகான உத்தியாகும்.

## தாவரமும் வாழ்க்கையும்

வேல் வாள் முதலிய போர்க்கருவிகள் இலை வடிவின. வேலை வைத்து முதலில் தமிழ்மக்கள் விவசாயத்தை நடத்தினர். வேலாளர் எனும் சொல்லே வேளாளர் எனத் திரிந்தது. முற்காலத்தில் மரப்பொருள்களே கருவிகளாகப் பயன்பட்டன. பாண்டவர்கள் மறைந்து வாழ்கையில் வன்னிமரப்பொந்தில் தம் கருவிகளை மறைத்து வைத்தனர். புலாலைக் கொள்ளாத சைவ உணவும் சைவ மக்களும் தமிழ்நாட்டில் மட்டும் உண்டு. விவசாயத்தின் பெருமையை முன்னோர்கள் ஏகம்பவாணன் என்னும் குறுநில மன்னனின் கதை வாயிலாக வெளியிட்டிருக்கின்றனர்.

தாவரங்கள் தமிழ்ப்பாடங்களில் வந்து நிழல் வீசுகின்றன. வாணனுடைய அரண்மனை முற்றத்தில் சோழன் பாண்டியன். சேரன் ஆகிய மூவேந்தரும் காத்துக் கிடப்பர் என்பதனை அவர்களுடைய கொடியாகிய ஆர் (ஆத்தி) வேம்பு, பனை எனத் தாவரங்களை வைத்துச் சொல்லுகின்றனர். ஆத்தி, வேம்பு, பனை, அரசு, அத்தி ஆகிய ஐந்து தாவரங்களும் தமிழோடு சேர்ந்து குதி போடுகின்றன. மூவேந்தர்களுக்கும் தொண்டை நாட்டரசன் உதவி செய்கின்றான் என்பதை ஆத்தி, பனை, வேம்பு ஆகிய மரங்களுக்குத் தொண்டை அரசு நிழல் கொடுத்துக் காக்கிறது என்பதனை அழகாகச் சொல்கிறது ஒரு தமிழ்ப்பாடல்

மரமும்வேரும் தமிழ் வார்த்தைகளோடு மருவி நிற்கின்றன. கடப்பாரை கொண்டு பிளக்க இயலாத பாறையை வேர்முனை ஊடுருவிவிடும் என்கிறார் ஔவையார். இதமான வார்த்தைகள் எவரையும் மகிழ்வித்து வசப்படுத்தி விடும். காதலனைப் பிரிந்திருக்கும் பெண்ணை இளவேனில் துன்புறுத்துகிறது: தன் காதலனின் இதயத்தில் ஈரமும் அன்பும் வற்றிவிட்டதால், இளவேனில் அவனை ஒன்றும் செய்யாது எனக் கருதுகிறாள அவள். அன்பும் இரக்கமும் இல்லாத உள்ளத்தை மரம் என்னும் தாவரச் சொல் வந்து எடுத்துக்காட்டுகிறது.

பக்குவம் பெற்ற இதயம் யானை உண்ட விளாம்பழம் போன்றது என்பர்.

ஆணவத்தையும் செருக்கையும் ஒழித்த இதயத்திற்கும் இதனை ஒப்பிடுவர் கவிஞர் அதிவீரராம பாண்டியர். சிவபெருமானை அப்படியே முழுக்க முழுக்க கண்டு களிக்கத் துணையாக இருந்தது களாமரந்தான் என்று வியக்கிறார். களாமரத்தை உள்ளும் புறமும் அப்படியே அனுபவித்திருக்கிறார் ஆசிரியர். இந்தியர்களைப் போல் அதுவும் தமிழர்களைப் போல் தாவரத்திடம் பக்தியும் பேரன்பும் வைத்தவர்கள் யாரும் இல்லை.

வேதங்கள் சாதிக்க இயலாத காரியத்தை அறுகம்புல் சாதித்து விடுகிறது. அறும்புகல் சூரிய ஒளியை இழுத்துத் தனக்கு ஆகாரம் திரட்டிக் கொள்வதோடு அவ்வொளியை இனிப்புச் சத்தாக மாற்றி வைத்திருப்பது மனிதனை வியப்பிலாழ்த்துகிறது. உள்ளத்தில் வியப்புப் பெருகினால் ஆணவம் அகன்று விடுகிறது. அறும்புகல் அரிய காரியத்தைச் சாதித்து விடுகிறது. காஞ்சிப்புராணம் பாடிய மாதவச் சிவஞான யோகிகள் கூர்த்த அறிவினரை,

**'கருப்பையின் நுனியெனக்**
**கூர்த்த அறிவினர்'**
என்று குறிப்பிட்டுள்ளார்.

புல்லையே உணவாகக் கொண்டு திரியும் ஒருவகை மானைப் 'புல்வாய்' எனப் பெயரிட்டனர். வாய்க்காலையும் பசும் புல்லையும் ஓடும் நீரையும் அனுபவித்துப் பாடினார் ஔவைப் பிராட்டியார். பசும் புல்லின் அழகைப் பாரதியார் அற்புதமாய் அனுபவித்திருக்கிறார். ஆற்றுப் படுகையில் புல் நிறைந்து மண்டிக் கிடக்கும் இடத்தை ஒட்டி அமைந்த ஓர் ஊர் சங்க காலத்தில் இருந்தத. அதற்குப் புல்லாற்றூர் என்று பெயர். எயிற்றியனார் என்னும் சங்ககாலப் புலவரைப் புல்லாற்றூர் எயிற்றியனார் என்றார். ●

**-ல. சண்முகசுந்தரம்.**

**எழுதிய தமிழும் தாவரமும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.**

# பனைகளின் நாடு

எங்கள் வெளியில் தலைகள் நிமிர்த்தி
எழுந்த பனைகளின் நாடெங்கள் நாடே
ஓங்கி வளர்ந்தாலும் வாரி வழங்கிடும்
பாரி வள்ளல் பனை நாடெங்கள் நாடே

எங்கள் பனைகள் நுங்குகள் காய்க்கும்
கண்திறந்துண்டால் அமிர்தமும் தோற்கும்
எங்கள் பனைகள் பழங்கள் சொரியும்
ஏழைகள் வயிறு இளம் பசியாலும்

தின்னப் பனாட்டும் தீன் பணியாரமும்
தேனாமிர்தமாய் தித்தித் திருக்கும்
கிண்டியெடுத்த கிழங்கினைச் சுட்டுத்
திண்டாலதன் சுவை தனி விதமார்க்கும்

ஒடியல் மாக் கூழை ஊதிக்குடிக்கலாம்
ஒருகையில் தேங்காய்ச் சொட்டும்
கடிக்கலாம்
புழுக்கொடியல் மா தேங்காய்சீனி போட்ட
துவையலோ பொக்கை வாயிலும் போடலாம்

பதமாயிறக்கிய பதநீர் பழுதிலாப்
பானம் ருசி வெப்பு நோய்கட்கு நல்லம்
விளையக் காய்ச்சி எடுத்தாலது வெல்லம்
வெறிக்கப் போட்டால் கள்ளு வில்லங்கம்.

வேலியடைக்கவும் விடுகள் வேயவும்
பாயிழைச்சு பன்ன வேலைகள் செய்யவும்
ஏடு தொடக்கவும் ஓலைகள் தந்திடும்
ஏறு பனைகளின் நாடெங்கள் நாடே

நின்று நிமிர்ந்த பனைகளின் நாடு
நேர்த்தியாய் நின்ற கற்பகக் காடு
இன்று வெட்டுண்டு வீழ்ந்திடலாச்சோ
வெறுங்கூடலாச்சோ பனைகளின் நாடு

பனைகளின் மக்காள் பனைகளின்
பிள்ளைகாள்
பணிகள் தினமும் எமக்குண்டு கண்டீர்
பனங்கொட்டையென்று காலால் எத்தாதீர்
பக்குவம்! கற்பகவித்தென்று நாட்டுவீர்.

# காடுகள்

காடுகள் தெரியுமா காடுகள்
கனக்க உயர் மரங்கள் உடையவை
பற்றைக் காடுகளும் இடையிடை
பார்க்கக் குளிர்ச்சியாய் இருப்பவை
பச்சைப் பசேலென்று இருப்பவை.

காடுகள் விலங்குகளின் வாழ்விடங்கள்
பாடும் பறவைகளின் வீடுகள்
ஊர்வனவற்றினது உறைவிடங்கள்
உலகில் இல்லாத அமைதியின் மறைவிடங்கள்
காடுகள் நல்ல காடுகள்.

பூமித்தாயின் இருதயங்கள்
புதிய காற்றுத்தரும் பூங்காவனங்கள்
நல்ல மழை பெய்ய வைக்கும் வள்ளல்கள்
நதிகளின் ஓட்ட மைதானங்கள்
நல்ல வரமளிக்கின்ற பச்சைத் தேவதைகள்.

காடழித்துத் தீயிடுதல் ஆகுமா
கதறி உயிர்கள் சாதல் ஆகுமா
ஆடும் மயில்களைக் கொல்லலாமா
பாடும் குயில்களைக் கொல்லலாமா
தாவும் மான்களை கொல்லலாமா
பாவம் அல்லவா பச்சைஉயிர்க் காடுகள்.

காடுகளைக் கொல்பவர்கள் பாவிகள்
காடுகளைக் காக்கவேண்டும் நாடுகள்.

சு.வி



Printed By: RAINBOW MINILAB (PTE) LTD. Trincomalee. 026-23078,23454.